# கொமரசாமி கவுண்டர் பதின்ம மேல்நிலைப்பள்ளி - குருமந்தூர்

## மாதாந்திரத் தேர்வு - ஜூலை - 2023

## பத்தாம்வகுப்பு

## தமிழ்

நேரம் : 1.30 மணி    பகுதி = இயல் 1,2    மொத்த மதிப்பெண்கள் : 50

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு :** 7 X 1 = 7

1. "அன்னை மொழியே " என்ற கவிதையில் இடம்பெறும் மூவேந்தருள் ஒருவர்

அ) சேரன்  ஆ) சோழன்  இ) பாண்டியன்  ஈ) பல்லவன்

2. வேர்கடலை , மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

அ) குலை வகை  ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை  ஈ) இலை வகை

3."சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும் " என்று பாடியவர் யார்?

அ) பாரதிதாசன்  ஆ) பெருஞ்சித்திரனார்

இ) சச்சிதானந்தன்  ஈ) ஆறுமுகநாவலர்

4. மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

5. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

i) கொண்டல் – 1. மேற்கு

ii) கோடை – 2. தெற்கு

iii) வாடை – 3. கிழக்கு

iv) தென்றல் – 4. வடக்கு

அ) 1, 2, 3, 4  ஆ) 3, 1, 4, 2  இ) 4, 3, 2, 1  ஈ) 3, 4, 1, 2

6. மலர் போன்ற கை' இதில் 'மலர்' என்பது ................... 'போன்ற' என்பது ............... 'கை' என்பது ...................

அ) உவம உருபு - உவமை - உவமேயம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) உவமை - உவம உருபு - உவமேயம்

இ) உவமேயம் - உவமை - உவம உருபு

ஈ) இவற்றுள் ஏதுமில்லை

7. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

பகுதி - ஆ

II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3 X 2 = 6

8. 'நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம் – மரங்களை

வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்'

– இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

9. மழைப்பொழிவு குறித்து முல்லைப் பாட்டில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?

10. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

11. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

12. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம் பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.

13. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

பகுதி - இ

III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2 X 3 = 6

14. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

15. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்......... முதலிய



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ........... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

16. மொழியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி - ஈ

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி : 3 X 5 = 15

17. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

18. தமிழாக்கம் தருக:

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature , the Marutam , region was fit for cultivation , as it has the most fertile lands . The property of a farmer depended on getting the necessary sunlight ,seasonal rains and fertility of the soil. Among these elements of nature , sunlight was considered indispensible by the ancient Tamils.

19. "வாழ்த்துவமே" என முடியும் வாழ்த்துப்பாடலை எழுதுக.

20. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



21 . நிற்க அதற்கு தக.

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | |
|---|---|
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது ? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

பகுதி - உ

V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி: 2 X 8 = 16

22. உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி என்பதை நிறுவுக.

அல்லது

மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

23. சான்றோர் வளர்த்த தமிழ் பற்றி கட்டுரை எழுதுக.

அல்லது

மாநில அளவில் நடைபெற்ற “ மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com